# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 4.75** **தபாற் செலவு: ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 5/2007

**2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம் "வர்த்தக வங்கி அல்லது ஒரு விசேட வங்கி" என்னும் சொற்கள் அச்சட்டத்தின், 5 ஆம் பிரிவிலும், 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலும், 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலும், 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலும், 14 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளிலும், 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும், 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலும் தவிர வேறு எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "வர்த்தக வங்கி, விசேட வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பெனி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *2002 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்திற்கான பொதுத் திருத்தம்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, 3 ஆம் பிரிவு, 4 ஆம் பிரிவு, 9ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவு, 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகள் அத்துடன் 13 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கியொன்று" எனும் சொற்களுக்கு பதிலாக, "வர்த்தக வங்கியொன்று அல்லது விஷேட வங்கியொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம் அப்பிரிவுகள் திருத்தப்படுகின்றன. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகளைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் நடைமுறைக் கணக்கு பற்றிய வரைவிலக்கணத்தில் "ஒரு வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்

கூறிலுள்ள ஒரு கணக்கு அத்துடன் ஒரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு” என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, “ஒரு வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறிலுள்ள ஒரு கணக்கு, ஒரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு அத்துடன் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபா கணக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் சேமிப்புக் கணக்கு பற்றிய வரைவிலக்கணத்தில் “உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் பேணப்படும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் அல்லது நிதிக் கம்பெனியொன்றில் பேணப்படும்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்